# 'தொழிற்திறன் சார்ந்த கல்வியே மாணவர்களுக்கு தேவை'


திருச்சி: பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் தொழில் முனைவோர் சுயவேலை மேம்பாட்டு நிறுவனம் (ஈசிடி) சார்பில் செயல்படுத்தப்படும் பள்ளி மாணவர்களுக்கான 'சூட்ஸ்' திட்டத்தின் கீழ் முதலாவதாக வந்த மாணவ, மாணவிகளுக்கு தங்கப்பதக்கம் மற்றும் மாநில அளவிலான தரச்சான்றிதழ்கள் வழங்கும் விழா ஈசிடி வளாகத்தில் நடந்தது.

விழாவிற்கு, பல்கலை. துணைவேந்தர் முத்துக்குமார் தலைமை வகித்து, பயிற்சிகளில் மாநில அளவில் முதன்மை பெற்ற 12 மாணவ, மாணவிகளுக்கு தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ்களும், மாநில அளவில் சிறந்த 5 பள்ளிகளுக்கு கோப்பைகளையும், மாநில அளவில் 2வது, 3வது இடம் பெற்ற 55 பள்ளி மாணவர்களுக்கு தரச்சான்றிதழ்களையும் வழங்கினார்.

அப்போது அவர் பேசுகையில், ''பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஈசிடியின் 'சூட்ஸ்' என்ற திட்டத்தின் கீழ் தமிழகம் முழுவதும் 5ம் வகுப்பு முதல் 9ம் வகுப்பு வரையிலான பள்ளி மாணவர்களுக்கு கம்ப்யூட்டர் தகவல் தொழில்நுட்பப்பயிற்சிகள் கடந்த 2009-10ம் கல்வியாண்டு முதல் வழங்கப் பட்டு வருகிறது. இத்திட் டத்தின் மூலம் பள்ளி மாணவர்களுக்கு அளிக்கப் படும் கம்ப்யூட்டர் பயிற்சி, அவர்களது கம்ப்யூட்டர் அறிவுக்கு அடித்தளமாக விளங்குகிறது.

இத்திட்டத்தின் கீழ் கடந்த 6 ஆண்டுகளில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள 140 பள்ளிகளில் மொத்தம் 35 ஆயிரத்து 655 மாணவ, மாணவிகளுக்கு பயிற்சி அளித்து பல்கலைக்கழக சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது. ஒருவருக்கு கல்வியை அளிக்கும் போது, தொழிற்திறன் சார்ந்த கல்வியை அளித்தால் அது அவர்கள் மென்மேலும் வளர வழிவகுக்கும். மாணவர்களும் வேலைவாய்ப்பிற்காக படிக்காமல், வேலையை தேடிப் போகாமல், தாங்களே வேலைவாய்ப்பை உருவாக்கி கொள்ளும் வகையில் சிறந்த தொழில் முனைவோராக உருவாக வேண்டும்'', என்றார்.

விழாவில், தஞ்சாவூர் என்.எஸ்.கே. கல்வி நல அறக்கட்டளை நிர்வாக பொறுப்பாளர் சேகர், பாரதிதாசன் பல்கலை. மக்கள் தகவல் அலுவலர் கோதனகாந்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஈசிடி இயக்குனர் பார்த்தசாரதி வரவேற்றார். தாஸ்பால் இன்போடெக் நிறுவன தலைமை செயல் அலுவலர் பழனி ராமதாஸ் நன்றி கூறினார்.



திருச்சி கலெக்டர் அலுவலகத்தில் நடந்த மக்கள் குறைதீர் கூட்டத்தில், திருச்சி மேலசிந்தாமணியைச் சேர்ந்த பொறியியல் மாணவி ஐஸ்வர்யாவிற்கு, கல்வி உதவித் தொகைக்கான காசோலையை கலெக்டர் பழனிச்சாமி வழங்கினார்.

திருச்சிராப்பள்ளி இசைவுத் தீர்ப்பாயம்
முன்பாக தனித்த இசைவுத் தீர்ப்பாளர்